අධිකරණ අමාත්‍යාංශය நீதி அமைச்சு MINISTRY OF JUSTICE
ජාතික සමගිය හා ප්‍රතිසංධානය සඳහා වන කාර්යාලය
தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்
Office For National Unity And Reconciliation

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிப்பாளர் நாயகம் — பதவிகளின்: 01

சேவைப் பிரிவு: **HM 1-3**

## பதவியின் தன்மை

பணிப்பாளர் நாயகம், நிறுவனத்தின் அதியுயர் நிறைவேற்று அதிகாரியாவார். நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் கையளிக்கப்படும் அதிகாரங்கள், பணிகள் மற்றும் பொறுப்புக்களை அப்பணிப்பாளர் சபையின் வழிகாட்டல் மற்றும் நிர்வாகத்தின் கீழ் நிறைவேற்றுவதுடன், நிறுவனத்தின் பதவியணியினருக்கு தலைமைத்துவம் வழங்கி அவர்களை ஊக்குவித்து, நிறுவனத்தை உயர்ந்தபட்ச உற்பத்தித்திறனை நோக்கி வழிநடத்துவதும், நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை தொடர்பில் அடிப்படைப் பொறுப்பினை மற்றும் பொறுப்புக்கூறலை வகிப்பதும் பிரதம நிறைவேற்று அதிகாரியான பணிப்பாளர் நாயகம் பதவியை வகிப்பவருக்கு ஒப்படைக்கப்படும் வகிபாகமாகும்.

## தகைமைகள்

பொது நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / சமாதானம் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு / பொருளியல் / சட்டம் / சர்வதேச உறவுகள் அல்லது பதவிக்குரிய விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்;

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

அத்துடன்

பொது நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / சமாதானம் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு / பொருளியல் / சட்டம் / சர்வதேச உறவுகள் அல்லது பதவிக்குரிய விடயத்துறையில் முதுமானிப் பட்டம் (Masters) பெற்றிருத்தல்.

மற்றும்

பல்கலைக்கழக பட்டத்தைப் பெற்றதன் பின்னர் அரசாங்கத்தில், அரச கூட்டுத்தாபனத்தில், சபையில், நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் அல்லது சரவதேச நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தின்" பதவியொன்றில் குறைந்தபட்சம் உரிய துறையில் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## வயதெல்லை

35 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

---

## சம்பள அளவுத்திட்டம்

**HM 1-3 – ரூ. (152,500 - 15 x 4,100 - 214,000)**

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)

Gazette.lk AMBITIONS REALIZED